சக்கரவியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"

FLY TOWARDS
DIGITAL INNOVATION

Services / சேவைகள்

✓DIGITAL MARKETING
✓WEB DEVELOPMENT
✓SOFTWARE DEVELOPMENT

9080999823
7695883647

வடக்கு ரத வீதி,சங்கரன்கோவில்

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01	ISSUE: 302	25.04.2026	SATURDAY	CHITHIRAI: 12	PRICE : RS.5/-
மலர் : 01	இதழ் : 302	25.04.2026	சனிக்கிழமை	சித்திரை : 12	விலை : ரூ.5/-

'ஹார்முஸ் ஜலசந்தி நெருக்கடி'

"ஏளனம் பேசியோருக்கு செயல் மூலம் தவெகவினர் பதிலடி" : விஜய் பெருமிதம்

சென்னை: ஏப்.25-

"அரசியல் மாயாஜாலக் கணக்குகள் சாதாரண வெகுஜன மக்களால் உடைத்து நொறுக்கப்பட்டுள்ளன. தேர்தல் திருவிழா என்றும், ஜனநாயகத் திருவிழா என்றும் சொல்லப்படுவதன் அர்த்தம் சுகப்பட்டதே நேற்றுதான்" என தவெக தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

மேலும், 'இவர்களுக்கெல்லாம் என்ன அரசியல் தெரியும், எப்படித் தாக்குப் பிடிப்பார்கள்' என்று ஏளனம் பேசியோருக்குச் செயல் மூலம் தவெகவினர் பதிலடி தந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், "அரசியல் என்பது ஏதோ அசகாய சூரர்களுக்கானது மட்டுமே. அதீத அனுபவசாலிகளுக்கானது மட்டுமே. பதவிகளை அனுபவிப்பவர் களுக்கானது மட்டுமே. இப்படி அரசியலை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் மட்டுப்படுத்தியும் கட்டுப்படுத்தியும் வைத்தவர்களின் மாயாஜாலக் கணக்குகள், சாதாரண வெகுஜன மக்களால் உடைத்து நொறுக்கப்பட்டுள்ளன.

அரசியலைக் கண்டுகொள்ளவே மாட்டார்கள் என்று இதுவரை அனுமானிக்கப்பட்ட இளைஞர்களும் பெண்களும் அரசியல் பேசத் தொடங்கிய அதிசயமும் அவசியமும் நிகழத் தொடங்கிவிட்டது. இது எப்போது இருந்து தொடங்கியதென நடுநிலை மனம்கொண்டோர் அனைவரும் உணர்வர்.

இதுவரை பெருமளவிலான குறிப்பிட்ட சதவீத வாக்குகள், வாக்குச்சாவடி பக்கமே வராமல் இருந்தன. ஆனால், 2026ஆம் ஆண்டு ஏப்ரல் 23ம் தேதி நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப்பதிவு, தமிழகத் தேர்தல் அரசியல் வரலாற்றில் சிகரமான வரலாற்று நிகழ்வாகப் பதிவாகி உள்ளது. 85% வாக்குப்பதிவு என்பதெல்லாம் இதுவரை தமிழ்நாடு காணாத ஒன்று.

வாக்குச்சாவடிகள் எங்கும் கோவில்களில் காணப்படும் கூட்டம்போல, குடும்பம் குடும்பமாகக் குழந்தை குட்டிகளுடன் வந்து வாக்களித்ததைக்

கண்டு வியக்காதோர் எவரும் இருக்கவே வாய்ப்பில்லை.

அது மட்டுமா? வெளிமாநிலங்களில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் வாக்களிப்பதற்காகவே பெரும்பொருள் செலவு செய்து வந்த ஜனநாயகர்களை இருகரம் கூப்பி வணங்காமல் இருக்க முடியுமா?

தேர்தல் திருவிழா என்றும், ஜனநாயகத் திருவிழா என்றும் சொல்லப்படுவதன் அர்த்தம் சுகப்பட்டதே நேற்றுதான். இந்த 2026 ஏப்ரல் 23 தான். எனினும் இது ஒரு தொடக்கம் மட்டுமே.

தமிழகத் தேர்தல் அரசியலை அர்த்தப்படுத்திய தமிழ்நாட்டு மக்களாகிய, என் பாட்டி, அம்மா, அக்கா, தங்கைகள், என் தாத்தா, அப்பா, அண்ணன், தம்பிகள், என் குடும்ப உறவுகள் அனைவருக்கும் என் சிரம் தாழ்ந்த நன்றியறிதலைக் காணிக்கையாக்குகிறேன்.

குறிப்பாக, நம் குடும்பத்தினரை வழிநடத்திய என் குட்டி நண்பா நண்பீஸுக்கு என்னுடைய உங்கள் விஜய் மாமாவின் ஸ்பெஷல் வணக்கமும் நன்றியும். குறிப்பாக, நான் நன்றி செலுத்த வேண்டியது, நம் வாக்குச்சாவடி முகவர்களுக்கும், நம் கட்சித் தோழர்களுக்கும் அனைத்து நிலை நிர்வாகிகளுக்கும்தான்.

இவர்களுக்கெல்லாம் என்ன அரசியல் தெரியும்? எப்படித் தாக்குப் பிடிப்பார்கள் என்று ஏளனம் பேசியோருக்குச் செயல் மூலம் பதிலடி தந்த கட்சித் தோழர்களேஞ் உங்களுக்கு என் மனம்நிறைந்த வாழ்த்துகளும் நன்றியும். கட்சித் தோழர்களுக்கு உறுதுணையாக இருந்த குடும்பத்தினருக்கும் நன்றி" என்று விஜய் தெரிவித்துள்ளார்.

தமிழக உள் மாவட்டங்களில் ஏப்.27 வரை 5 டிகிரி வெப்பம் அதிகரிக்க வாய்ப்பு

சென்னை, ஏப்.25-

தமிழக உள் மாவட்டங்களில் நாளை முதல் 27ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயரக்கூடும்.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென் தமிழக கடலோர பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. மேலும், கிழக்கு விதர்பா முதல் குமரிக்கடல் வரை தெலங்கானா, உள் கர்நாடகா மற்றும் தமிழகம் வழியாக ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை சுமார் 900 மீட்டர் உயரத்தில், நிலவுகிறது.

இதன் காரணமாக நாளை (ஏப்.25) முதல் ஏப்.27ம் தேதி வரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தென் தமிழக கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான

மழையும், 28ம் தேதி ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழையும் பெய்ய வாய்ப்புள்ளது. 29, 30 தேதிகளில் தமிழகம், புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

உள் தமிழக மாவட்டங்களில் நாளை முதல் 27ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயரக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 100 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 82 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக ராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சிமடத்தில் 2 செமீ, கன்னியாகுமரி மாவட்டம் திற்பரப்பு பெருஞ்சாணி அணை, புத்தன் அணை, திருநெல்வேலி மாவட்டம் ஊத்து, நாலுமுக்கு ஆகிய இடங்களில் தலா 1 செமீ மழை பதிவாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்.30ல் தூதரக தலைவர்கள் மாநாட்டில் பிரதமர் மோடி விளக்க உரை

புதுடெல்லி: ஜன.25-

ஹார்முஸ் ஜலசந்தியில் அமெரிக்காவும் ஈரானும் ஆதிக்கம் செலுத்தி வரும் நிலையில், வரும் 30ம் தேதி டெல்லியில் நடைபெற உள்ள இந்திய தூதரகத் தலைவர்கள் மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி இது குறித்து விளக்க உரை நிகழ்த்த உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

கடந்த பிப்.28ம் தேதி அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரான் மீது தாக்குதல் நடத்தின. இதையடுத்து, இஸ்ரேலுக்கு எதிராகவும், வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க நிலைகளை குறிவைத்தும் ஈரான் தாக்குதல் நடத்தியது. மேலும், ஹார்முஸ் ஜலசந்தியை முடக்கியது.

இரு தரப்புக்கும் இடையே மோதல் முற்றிய நிலையில், பாகிஸ்தானின் தலையீடு காரணமாக கடந்த 8ம் தேதி இரு வாரங்களுக்கு போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து அமெரிக்காவும் ஈரானும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டன. எனினும், அது பலனளிக்காத நிலையில், போர் நிறுத்தத்தை காலவரையின்றி நீட்டிப்பதாக கடந்த 22ம் தேதி அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தார்.

மேலும், ஈரான் துறைமுகங்களையும் ஹார்முஸ் ஜலசந்தியையும் அமெரிக்க

கடற்படை முடக்கியுள்ள நிலையில், அமெரிக்காவுடன் அந்த நாடு உடன்பாடு மேற்கொள்ளும் வரை முடக்கம் தொடரும் என்று அறிவித்தார். ஈரான் மற்றும் அமெரிக்காவின் நடவடிக்கைகளால் ஹார்முஸ் ஜலசந்தி வழியாக கப்பல்கள் வெளியேறுவதோ உள்ளே செல்வதோ முடியாத நிலை உள்ளது. இந்திய துறைமுகங்களுக்கு வர வேண்டிய 14 கப்பல்கள் தற்போது ஹார்முஸ் ஜலசந்திக்கு உள்ளே நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. இதனால், இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பு பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஏப்ரல் 28 முதல் 30 வரை மூன்று நாட்களுக்கு இந்திய தூதரக தலைவர்கள் மாநாடு புதுடெல்லியில் நடைபெற உள்ளது. இதில், பல்வேறு நாடுகளில் இந்திய தூதர்களாக செயல்பட்டு வருபவர்கள் கலந்து கொள்ள இருக்கிறார்கள்.

இந்த மாநாட்டின் முதல் நாள், வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி தலைமையில் நடைபெற உள்ளது. இதில், மேற்கு ஆசியாவில் நிலவும் நெருக்கடி மற்றும் ஹார்முஸ் ஜலசந்தியை அமெரிக்காவும் ஈரானும் முற்றுகையிட்டு உள்ளதால் ஏற்படும் கடுமையான பொருளாதார பின்விளைவுகள் ஆகியவை குறித்து விக்ரம் மிஸ்ரி விளக்கம் அளிக்க உள்ளார். இதைத் தொடர்ந்து இந்த விவகாரத்தில் இந்தியா உட்பட உலக நாடுகள் பலவற்றின் நிலைப்பாடுகள் குறித்தும் அவர் விளக்கம் அளிக்க உள்ளார்.

இரண்டாம் நாள் மாநாட்டில், வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் உரையாற்ற உள்ளார். மேற்காசிய போர், உக்ரைன் போர், வளர்ந்து வரும் சீன ஆதிக்கம், புதிய உலகளாவிய சமநிலை ஆகியவை குறித்து இந்திய தூதர்களுக்கு ஜெய்சங்கர் விழிப்புணர்வை ஏற்படுத்த உள்ளார்.

அவரைத் தொடர்ந்து இந்திய பாதுகாப்புப் படைகளின் தலைமைத் தளபதி ஜெனரல் அனில் சவுகான், மாநாட்டில் உரையாற்ற உள்ளார். அவர், இந்திய ராணுவத்தின் திறன் மற்றும் ராணுவ கட்டமைப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் சீர்திருத்தங்கள் குறித்து தூதரக தலைவர்களுக்கு விளக்கம் அளிக்க உள்ளார். இந்த மாநாட்டில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலும் உரை நிகழ்த்த உள்ளார்.

மாநாட்டின் மூன்றாம் நாளான ஏப். 30ம் தேதி பிரதமர் நரேந்திர மோடி உரை நிகழ்த்த உள்ளார். அப்போது, வெளியுறவுத் துறையில் இந்தியாவின் தொலைநோக்குத் திட்டம் குறித்தும், மேற்காசிய போர் மற்றும் ஹார்முஸ் ஜலசந்தி விவகாரம் குறித்தும் பிரதமர் மோடி உரையாற்றுவார் என தகவல் வெளியாகி உள்ளது. முக்கிய நாடுகளுக்கான தூதர் நியமனங்களுக்கு, தொழில்முறை ராஜதந்திரிகளைத் தாண்டி மற்றவர்களையும் கருத்தில் கொள்ள மத்திய அரசு முடிவு செய்துள்ள நிலையில், இந்த மாநாடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.

"திமுக ஆட்சிக்கு எதிரான கொந்தளிப்பின் விளைவே 85.12% வாக்குகள் பதிவு" அன்புமணி

சென்னை: ஏப்.25-

"திமுக ஆட்சிக்கு எதிராக மக்கள் பெரும் கொந்தளிப்பில் இருந்தனர். திமுக ஆட்சியை அகற்றுவதற்காக திரண்டு வந்து வாக்களித்துள்ளனர். தேர்தலில் தங்களின் கோபத்தை தீர்ப்பாக வெளிப்படுத்தி விட்டனர். அதன் விளைவுதான் வரலாறு காணாத வகையில் 85.12% வாக்குகள் பதிவாகியிருக்கிறது" என்று பாமக தலைவர் அன்புமணி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தலில் 85.12% வாக்குகள் பதிவாகியிருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்திருக்கிறது. தமிழ்நாட்டில் தேர்தல் வரலாற்றில் இந்த அளவு வாக்குகள் பதிவாகியிருப்பது இதுதான் முதல் முறையாகும்.

தமிழ்நாட்டில் திமுக ஆட்சிக்கு எதிராக மக்கள் பெரும் கொந்தளிப்பில் இருந்தனர்; திமுக ஆட்சியை அகற்றுவதற்காக திரண்டு வந்து வாக்களித்துள்ளனர் என்பதையுமே இது காட்டுகிறது.

தமிழ்நாட்டு மக்கள் எப்போதுமே ஜனநாயகத்தை மதிப்பவர்கள்; அமைதிப்புரட்சி செய்பவர்கள். இப்போதும் அதைத்தான் நிகழ்த்திக் காட்டியிருக்கிறார்கள். திமுக ஆட்சிக்கு வந்த நாள் முதலாகவே மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் அரசால் கட்டவிழ்த்து விடப்பட்டன.

இன்னொருபுறம் சட்டம் ஒழுங்கை பாதுகாத்தல், கஞ்சா உள்ளிட்ட போதைப்

பொருள்களை கட்டுப்படுத்துதல், பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்தல், வேலைவாய்ப்பு வழங்குதல் உள்ளிட்ட ஓர் அரசின் அடிப்படைக் கடமைகள் எதையுமே திமுக அரசு செய்யவில்லை.

அதனால், கொந்தளித்துப் போன மக்கள் திமுகவுக்கு பாடம் புகட்டுவதற்காக காத்திருந்தனர். மக்கள் தங்களின் உணர்வுகளை அப்பட்டமாக வெளிப்படுத்தாமல், தெளிந்த நீரோடையாக இருந்தாலும், ஆழ்கடலின் பிரளயம் போன்று அவர்களின் மனதுக்குள் திமுகவை இந்தத் தேர்தலில் வீழ்த்த வேண்டும் என்ற கோபம் நீரு பூத்த நெருப்பாக கனன்று கொண்டே இருந்தது.

தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மக்களைச் சந்தித்த என்னைப் போன்றவர்களால் இந்த கோபத்தை புரிந்து கொள்ள முடிந்தது. ஆனால், ஆட்சியாளர்களால் இதைப் புரிந்துகொள்ள முடியவில்லை; அதனால் தங்களைத் திருத்திக் கொள்ளவும் இல்லை. எனவேதான் தமிழ்நாட்டு மக்கள் ஏற்கெனவே திட்டமிட்டிருந்தவாறு நேற்று நடந்த தேர்தலில் தங்களின் கோபத்தை தீர்ப்பாக வெளிப்படுத்தி விட்டனர். அதன் விளைவு தான் வரலாறு காணாத வகையில் 85.12% வாக்குகள் பதிவாகியிருப்பதாகும்.

இந்த வாக்குகள் ஆட்சி மாற்றத்துக்கான வாக்குகள் தான் என்பதை அனைவராலும் புரிந்துகொள்ள முடிகிறது. இந்தத் தீர்ப்புக்காகத் தான் தமிழ்நாட்டு மக்கள் காத்திருந்தார்கள். இந்தத் தீர்ப்பு தான் தமிழக மக்களுக்கு நரக ஆட்சியிலிருந்து விடுதலை அளிக்கப் போகிறது.

இனி வரும் காலம் தமிழ்நாட்டு மக்களுக்கு மகிழ்ச்சியையும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு பாதுகாப்பையும், அனைவருக்கும் அமைதியான, நிம்மதியான வாழ்க்கையையும் வழங்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. இந்தத் தீர்ப்பை வழங்கிய தமிழ்நாட்டு வாக்காளர்களுக்கு எனது உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வயலில் பயிர்கள் செழித்து வளர்ந்திருந்தாலும் அவற்றை அறுவடை செய்து வராவிட்டால் எந்தப் பயனும் இல்லை. அதேபோல் தான் தேர்தல் களமும். மக்கள் மனதில் கனன்ற கோபத்தை ஆட்சியாளர்களுக்கு எதிரான வாக்குகளாக மாற்றியது தான் இந்தத் தேர்தலின் வெற்றி ஆகும். அதற்காக அதிமுக தலைமையிலான கூட்டணியில் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் மாநிலம் முழுவதும் சுற்றி வந்து தீவிரமாக பரப்புரை செய்தனர்.

அதேபோல், பாட்டாளி மக்கள் கட்சி உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளின் அனைத்து நிலை நிர்வாகிகளும் எந்தத் தொகுதியில் எந்தக் கட்சி வேட்பாளர் போட்டியிடுகிறார் என்பதையெல்லாம் மனதில் கொள்ளாமல் கூட்டணி வெற்றி பெற வேண்டும் என்பதற்காக கடுமையாக உழைத்தார்கள். இதற்காக அவர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக பாட்டாளி மக்கள் கட்சியினர் இந்தத் தேர்தலில் காட்டிய வேகமும், விவேகமும் என்னை மெய்சிலிர்க்க வைத்தது. பாட்டாளி மக்கள் கட்சியின் அடிமட்டத் தொண்டர்கள் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் எல்லா தொகுதிகளிலும் பலமுறை வீடு வீடாக சென்று கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களுக்காக வாக்குகளைச் சேகரித்தனர்.

பல்வேறு தரப்பினராலும் ஏற்படுத்தப்பட்ட தடைகளையும், முட்டுக்கட்டைகளையும் தகர்த்தெறிந்து பாமக மற்றும் கூட்டணி கட்சியினரின் வெற்றிக்காக கடுமையாக உழைத்த பாட்டாளி மக்கள் கட்சியின் தொண்டர்களுக்கு நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்" என்று அன்புமணி தெரிவித்துள்ளார்.

திருப்பதியில் குறைந்த பக்தர்களின் கூட்டம்

திருப்பதி, ஏப்.25- தமிழகத்தில் நேற்று சட்டப்பேரவைத் தேர்தல் விறுவிறுப்பாக நடைபெற்றது. இதன் காரணமாக திருப்பதி ஏழுமலையான் கோயிலில் வழக்கத்தை விட சற்று குறைந்தே பக்தர்களின் கூட்டம் காணப்பட்டது.நேற்று ஏழுமலையானை பக்தர்கள் 2 முதல் 3 மணி நேரத்துக்கு உள்ளாகவே தரிசனம் செய்து வெளியே வந்தனர். ஆனால், தமிழக தேர்தலையொட்டி மதுபான கடைகள் அடைக்கப்பட்டன.இதனால் கடந்த 2 நாட்களாக தமிழக ஆந்திர எல்லையில் உள்ள சித்தூர், திருப்பதி, காளஹஸ்தி, குப்பம், புத்தூர், நகரி, பிச்சாட்டூர், சத்யவேடு, பலமனேர், கார்வேட்டி நகரம் ஆகிய பகுதிகளில் தமிழகத்தில் இருந்து பைக்குகள், கார்களில் வந்து மது அருந்தியும், மதுபான பாட்டில்களை வாங்கியும் சென்றனர். இதனால் ஆந்திர எல்லைகளில் உள்ள மதுக்கடைகளில் 2 நாட்களாக கூட்டம் அலைமோதியது.

சென்னையில் வாக்கு எண்ணும் மையங்களில் 4 அடுக்கு பாதுகாப்பு: காவல் ஆணையர் தகவல்

சென்னை, ஏப்.25- சென்னை பெருநகர காவல் ஆணையாளர், சென்னையில் உள்ள 3 வாக்கு எண்ணும் மையங்களுக்கும் நேரில் சென்று காவல் அதிகாரிகளுடன் பாதுகாப்புப் பணிகளை பார்வையிட்டார். வாக்கு எண்ணும் மையங்களில் 4 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இது குறித்து வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் 2026 நேற்று தமிழகம் முழுவதும் நடைபெற்றது. இதில் சென்னை பெருநகர காவல் எல்லைக்குட்பட்ட 16 சட்டப்பேரவைத் தொகுதிகளில் நடைபெற்ற வாக்குப்பதிவு இயந்திரங்கள் ஆயுதங்கள் ஏந்திய காவல் குழுவினர் மூலம் பாதுகாப்பாக எடுத்து செல்லப்பட்டு ராணிமேரி கல்லூரி, லயோலா கல்லூரி மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் ஆகிய 3 வாக்கு எண்ணும் மையங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் உத்தரவின் பேரில், கூடுதல் ஆணையாளர்கள் மேற்பார்வையில், இணை ஆணையாளர்கள் கண்காணிப்பில், துணை ஆணையாளர்கள் தலைமையில் மேற்படி 3 வாக்கு எண்ணும் மையங்களிலும் 4 அடுக்கு பலத்த காவல் துறை பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.முதல் அடுக்கில் மத்திய ஆயுத காவல் படையினரும் (CAPF), 2வது அடுக்கில் தமிழ்நாடு சிறப்பு காவல் படையினரும் (Tamilnadu Special Police), 3வது அடுக்கில் சென்னை பெருநகர ஆயுதப்படையினரும் (Armed Reserve), 4வது அடுக்கில் சென்னை பெருநகர காவல் சட்டம் மற்றும் ஒழுங்கு, குற்றப்பிரிவு, போக்குவரத்து, சிறப்பு பிரிவுகளைச் சேர்ந்த காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களும் நியமிக்கப்பட்டு 24 மணி நேரமும் சுழற்சி முறையில் பலத்த பாதுகாப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அபின் தினேஷ் மோதக் நேற்று இரவு ராணி மேரி கல்லூரி, அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் லயோலா கல்லூரி ஆகிய 3 வாக்கு எண்ணும் மையங்களுக்கு நேரில் சென்று காவல் அதிகாரிகளுடன் பாதுகாப்பு பணிகளை பார்வையிட்டார்.மேலும், அங்கு மேற்கொண்டுள்ள பாதுகாப்பு பணிகள் மற்றும் கட்டமைப்புகளை ஆய்வு செய்து மேற்படி வாக்கு எண்ணும் மையங்களில் மேற்கொள்ள வேண்டிய வழிகாட்டு தல் நெறிமுறைகளை கடைபிடித்து, பாதுகாப்பு பணிகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து காவல் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டு அறிவுரைகள் வழங்கினார்.

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்படுமா? கமல்ஹாசன் குழப்பமான பதில்

சென்னை, ஏப்.25- தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்படுமா? என்ற கேள்விக்கு 'மாற்றம் வந்து கொண்டேதான் இருக்கும்' என்று கமல்ஹாசன் குழப்பமான பதில் அளித்தார்.

மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் தேனாம்பேட்டை எல்டாம்ஸ் சாலை திருவள்ளுவர் சாலை சந்திப்பில் உள்ள மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி வாக்குச் சாவடியில் அவரது மகள் ஸ்ருதி ஹாசனுடன் வரிசையில் நின்று வாக்களித்தார்.

பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறும்போது, "எனது ஜனநாயகக் கடமையை ஆற்றியுள்ளேன். மற்ற வாக்காளர்களும் வாக்களித்து தங்கள் ஜனநாயகக் கடமையை நிறைவேற்றி வருகிறார்கள்" என்றார். தொடர்ந்து அவரிடம், "தமிழகத்தில் ஆட்சி மாற்றம் வருமா?" என கேள்வி எழுப்பியபோது, "மாற்றம் வந்து கொண்டேதான் இருக்கும்" என்று குழப்பமான

பதிலளித்தார்.தமாகா தலைவர் ஜி.கே.வாசன், ஆழ்வார்பேட்டை மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி வாக்குச்சாவடியில் வாக்களித்த பிறகு செய்தியாளர்களிடம் கூறும்போது, "தற்போதைய திமுக ஆட்சியில் மக்கள் அதிருப்தியில் உள்ளனர். எனவே, அவர்கள் மாற்றத்தை விரும்பி வாக்களிப்பார்கள். தேசிய ஜனநாயகக் கூட்டணி சிறப்பான ஆட்சி அமைக்கும் என நம்பிக்கை இருக்கிறது" என்றார்.

அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் அடையாறு தாமோதரபுரம் அரசு நடுநிலைப்பள்ளி வாக்குச்சாவடியில் வாக்களித்தார். பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறும்போது, "ஆளுங்கட்சியான திமுக தேர்தலில் தோல்வி அடைந்துவிடுவோம் என்ற அச்சத்தில் உள்ளது. அதனால், அதிமுக கூட்டணி மீது பல்வேறு அவதூறுகளைப் பரப்பி வருகிறது. தமிழகத்தின் வளர்ச்சியையும், சட்டம் ஒழுங்கையும் கருத்தில்கொண்டு புதிய வாக்காளர்கள் வாக்களிக்க வேண்டும். தமிழகத்தில் அமைதியான சூழல் மற்றும் வளர்ச்சி ஏற்பட அதிமுக தலைமையில் கூட்டணி ஆட்சி அமைய வேண்டும்" என்றார்.

வாக்காளர்களுக்கு திமுகவினர் டோக்கன்: அதிமுக வேட்பாளர் வளர்மதியின் கணவர் சாலையில் படுத்து தர்ணா

சென்னை, ஏப்.25- திமுகவினர் வாக்காளர்களுக்கு டோக்கன் வழங்குவதாக கூறி, ஆயிரம் விளக்கு தொகுதி அதிமுக வேட்பாளர் வளர்மதியின் கணவர் சாலையில் படுத்து தர்ணா போராட்டம் நடத்தியது பரபரப்பை ஏற்படுத்தியது.

தமிழக சட்டப்பேரவை தேர்தலையொட்டி, ஆயிரம் விளக்கு தொகுதி அதிமுக வேட்பாளர் பா.வளர்மதியின் கணவர், வள்ளுவர் கோட்டம் வாக்குச் சாவடிக்கு வருகை தந்தார். சிறிது நேரத்தில், தனது ஆதரவாளர்களுடன் வள்ளுவர் கோட்டம் சந்திப்புக்குச் சென்ற அவர், திடீரென நடுரோட்டில் படுத்து தர்ணா போராட்டத்

தில் ஈடுபட்டார். இதனால், அப்பகுதியில் போக்கு வரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது.தகவலறிந்து வந்த போலீஸார் அவரிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது அவர், "திமுக வேட்பாளர் எழிலனின் ஆதரவாளர்கள் வாக்காளர்களுக்கு ரகசியமாக டோக்கன் வழங்கி வருகின்றனர். தேர்தலுக்குப் பிறகு இந்த டோக்கன்களைக் காண்பித்து பணம் பெற்றுக்கொள்ளலாம் என ஆசை காட்டுகிறார்கள். இதுகுறித்து, புகார் அளித்தும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காததால் தான் இந்த போராட்டம்" என தெரிவித்தார்.போலீஸாரின் சமாதானப் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து அவர் அங்கிருந்து கலைந்து சென்றார். இச்சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்து கடவுள்களை அவமதிப்பதா?

பிரகாஷ்ராஜ் மீது ரூ.100 கோடிக்கு மான நஷ்டஈடு வழக்கு

திருப்பதி, ஏப்.25- இந்து கடவுள்களை அவமானப்படுத்தி யார் பேசினாலும் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்போம் என திருமலை திருப்பதி தேவஸ்தான அறங்காவலர் குழு உறுப்பினர் பானு பிரகாஷ் ரெட்டி எச்சரித்துள்ளார். இவர் நடிகர் பிரகாஷ்ராஜ் மீதும் ரூ.100 கோடிக்கு மான நஷ்ட ஈடு வழக்கை தொடர்ந்துள்ளார்.

அறங்காவலர் குழு உறுப்பினரும், பாஜகவின் ஆந்திர மாநில செய்தித் தொடர்பாளருமான பானு பிரகாஷ் ரெட்டி, சமீபத்தில் ராமர், லட்சுமணர் பற்றி கேலியாக பேசிய நடிகர் பிரகாஷ்ராஜ் மீது ரூ. 100 கோடிக்கு மான நஷ்ட ஈடு வழக்கை தொடர்ந்துள்ளார். இது தொடர்பாக அவர் நடிகர் பிரகாஷ்ராஜ் மீது வழக்கு பதிவு செய்ய வேண்டுமென ஆந்திர டிஜிபியிடம் புகார் அளித்துள்ளார்.

இது தொடர்பாக பானு பிரகாஷ் ரெட்டி கூறியதாவது: இந்து கடவுள்கள், இந்து கலாச்சாரங்களை கொச்சை படுத்தும் வகையில் சமூக வலைதளத்தில் பேசுவது பலருக்கு வாடிக்கையாகி விட்டது. அப்படி பேசுபவர்களின் பேச்சை இனி கேட்டுக்கொண்டு இருக்க முடியாது. சமீபத்தில் இந்து கடவுள்களை இழிவாகவும், கேலியும், கிண்டலுமாக பேசிய நடிகர் பிரகாஷ்ராஜ் மீதும் ரூ.100 கோடிக்கு மான நஷ்ட ஈடு வழக்கு தொடரப்பட்டுள்ளது.

சிலர் இதையே பிழைப்பாக வைத்துக்கொண்டு சமூக வலைதளங்கள் மூலம் பேசுகின்றனர். சனாதன தர்மத்தை யார் தரக்குறைவாக பேசினாலும் நாங்கள் வேடிக்கை பார்த்து கொண்டு இருக்க மாட்டோம். கோயில்கள் என்பது மதசார்பற்ற இடம் கிடையாது. அது இந்துக்களுக்கு மட்டுமானது. இனி கோயில்களில் இந்துக்கள் மட்டுமே பணியாற்ற வேண்டும். வியாபாரங்களும் இந்துக்கள் மட்டுமே செய்ய வேண்டும்.

ஸ்ரீசைலம் மல்லிகார்ஜுனர் கோயிலிலும் வேற்று மதத்தினர் பலர் பணியாற்றுகின்றனர் எனும் தகவல்கள் வருகின்றன. இது குறித்தும் ஆந்திராவில் கூட்டணி அரசு ஆலோசித்து முடிவெடுக்கும். ஆந்திராவில் இந்து கோயில்கள் மீது தாக்குதல் நடத்தினால் சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மத்தியில் உள்ள பாஜகவின் ஆட்சியால் நாட்டில் இந்து கோயில்கள், கலாச்சாரத்திற்கு பாதுகாப்பு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்

தமிழகத்தில் ஜனநாயக கடமையாற்ற வெளிநாட்டில் இருந்து வந்தவர்கள்

வேலூர், ஏப்.25- தமிழக சட்டமன்ற தேர்தல் நேற்று காலை முதல் மாலை வரை நடந்து முடிந்தது. வேலூர் சார்பனாமேடு பகுதியைச் சேர்ந்தவர் விஜயலட்சுமி. இவர் மலேசியாவில் சாப்ட்வேர் கம்பெனியில் பணியாற்றி வருகிறார். சட்டமன்ற தேர்தலில் வாக்களிக்க நேற்று முன்தினம் வேலூருக்கு வந்தார். நேற்று வேலூர் ராமலிங்கம் மெட்ரிக்குலேஷன் பள்ளியில் வாக்களித்தார். பின்னர், விஜயலட்சுமி கூறுகையில், 'நான் மலேசியாவில் சாப்ட்வேர் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். நேற்று முன்தினம் தான் மலேசியாவில் இருந்து வேலூருக்கு வந்தேன். வாக்களிப்பது ஒவ்வொருவரின் கடமைன்னு நினைக்கிறேன். என்னோட கடமையை செய்துவிட்டேன். 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் தேர்தலில், யார் வந்தால் நன்றாக இருக்கும் என்று சிந்தித்து வாக்களிக்க வேண்டும். தேர்தலில் வாக்களிக்க ரூ.40 ஆயிரம் செலவு செய்து வந்துள்ளேன்' என்றார்.ராணிப்பேட்டை ராணிப்பேட்டை மாவட்டம் நவல்பூர் பகுதியைச் சேர்ந்தவர் முரளி. மின் பொறியாளரான இவருக்கு கடந்த 16 ஆண்டுகளுக்கு முன்பு தாய்லாந்தில் வேலை கிடைத்தது. அவர் தனது குடும்பத்துடன் அங்குதங்கி பணியாற்றி வருகிறார். இந்நிலையில் தமிழக சட்டமன்ற தேர்தலில் வாக்களிக்க முரளி தனது குடும்பத்துடன் சொந்த ஊருக்கு திரும்பினார். தொடர்ந்து நவல்பூரில் உள்ள கங்காதரா நிதியுதவி நடுநிலைப்பள்ளியில் முரளி மற்றும் அவரது மனைவி, மாமியார், மனைவியின் சகோதரி ஆகியோருடன் சென்று தங்களின் வாக்கினை பதிவு செய்து ஜனநாயக கடமையை நிறைவேற்றினர்

இந்திய வான்வெளியில் பறப்பதற்கு பாகிஸ்தான் விமானங்களுக்கு மே 24 வரை தடை நீட்டிப்பு

புதுடெல்லி, ஏப்.25- இந்திய வான்வெளியில் பாகிஸ்தான் விமானங்கள் பறப்பதற்கு விதிக்கப்பட்ட தடையை மே 24ம் தேதி வரை மத்திய அரசு நீட்டித்துள்ளது.ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஆண்டு ஏப்ரல் 22ம் தேதி பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து ஏப்ரல் 30ம் தேதி, இந்திய வான்வெளியில் பாகிஸ்தான் விமானங்கள் பறப்பதற்கு மத்திய அரசு தடை விதித்தது. ஆனால் இந்தியாவுக்கு முன்னதாகவே, மே 24 முதல் இத்தகைய தடையை பாகிஸ்தான் விதித்தது. பாகிஸ்தான் வான்வெளியில் இந்திய விமானங்கள் பறக்க

தடை விதிக்கப்பட்டது. இரு நாடுகளும் தங்கள் வான்வெளியை மற்ற நாட்டின் விமானங்களுக்கு மூடுவதற்கான தடையை கடந்த ஆண்டு ஏப்ரல் முதல் மாறி மாறி நீட்டித்து வருகின்றன. பாகிஸ்தான் தனது வான்வெளி தடையை கடந்த செவ்வாய்க்கிழமை மே 24 வரை நீட்டித்தது.

இந்நிலையில் மத்திய அரசு புதன்கிழமை வெளியிட்ட விமானிகளுக்கான அறிவிப்பு (NOTAM) ஒன்றில் "பாகிஸ்தான் விமானங்கள் (ராணுவ விமானங்கள் உட்பட) இந்திய வான்வெளியை பயன்படுத்த இயலாது. இந்த தடை மே 23ம் தேதி 23:59 மணி (UTC) வரை அமலில் இருக்கும். இந்திய நேரப்படி (IST) மே 24ம் தேதி காலை 05:30 மணி வரை அமலில் இருக்கும்" என்று கூறப்பட்டுள்ளது. இரு நாடுகளின் இந்த நடவடிக்கை ஓராண்டாக நீடித்து வருவது குறிப்பிடத்தக்கது. பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் செயல்பட்டு வந்த 9 தீவிரவாத முகாம்களை ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை மூலம் இந்தியா தாக்கி அழித்தது. மேலும் சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை இந்தியா ரத்து செய்தது.

சென்னையில் வாக்குப்பதிவு அமைதியாக நடந்தது: மாநகர காவல் ஆணையர் தகவல்

சென்னை, ஏப்.25- சென்னையில் அமைதியான முறையில் தேர்தல் நடந்து முடிந்ததாக, காவல் ஆணையர் அபின் தினேஷ் மோடக் தெரிவித்தார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் நேற்று நடைபெற்றது. காலை முதல் வாக்காளர்கள் ஆர்வமுடன் வாக்களித்தனர். முன்னதாக, சென்னையில் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள காவல் ஆணையர் அபின் தினேஷ் மோடக் உத்தரவிட்டிருந்தார்.

தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின் பேரில், அனைத்து வாக்குச்சாவடிகளிலும் துப்பாக்கி ஏந்திய போலீஸார் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டனர். அவர்களுடன் சட்டம் ஒழுங்கு மற்றும் இதர பிரிவு போலீஸாரும் ஒருங்கிணைந்து பணியாற்றினர். இந்நிலையில்,

பாதுகாப்பு ஏற்பாடுகளை காவல் ஆணையர் நேரில் சென்று ஆய்வு செய்தார். முதலில் கீழ்ப்பாக்கத்தில் உள்ள செயின்ட் ஜார்ஜ் ஆங்கிலோஇந்தியன் மேல்நிலைப் பள்ளிக்குச் சென்றார். அங்கு பாதுகாப்பு தொடர்பாக ஆய்வு செய்த பின்னர் வாக்காளர்களிடம் சென்று ஏதேனும் பாதுகாப்பு குறைபாடு உள்ளதா? என கேள்வி எழுப்பினார். அதற்கு அவர்கள் பாதுகாப்பு திருப்தியாக உள்ளதாகத் தெரிவித்தனர்.இதையடுத்து, சவுகார்பேட்டையில் உள்ள கன்னிகா பரமேஸ்வரி பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்குச் சென்று ஆய்வு செய்தார். அதைத் தொடர்ந்து, பதிவான வாக்குகள் வைக்கப்பட உள்ள ராணிமேரி கல்லூரிக்குச் சென்று பார்வையிட்டு, அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள போலீஸாருக்கு சில ஆலோசனைகளை வழங்கினார். பின்னர், அவர் ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரிக்குச் சென்று பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆய்வு செய்தார்.அப்போது, அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: அமைதியான முறையில் தேர்தல் வாக்குப்பதிவு நடைபெற விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மத்திய தொழில் பாதுகாப்பு படையினர், உள்ளூர் போலீஸார் என 21 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.பாதுகாப்பு பணிகளை நேரில் சென்று ஆய்வு செய்தேன். வாக்காளர்கள் தங்களது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினர். எந்தவித அசம்பாவிதங்களும் இன்றி அமைதியான முறையில் வாக்குப் பதிவு நடைபெற்றது. இவ்வாறு அவர் தெரிவித்தார்

கோடநாடு கொலை, கொள்ளை வழக்கு விசாரணையை ஜூன் 19ம் தேதிக்கு உதகை நீதிமன்றம் ஒத்திவைப்பு!

நீலகிரி, ஏப்.25- கோடநாடு கொலை, கொள்ளை வழக்கு விசாரணையை ஜூன் 19ம் தேதிக்கு உதகை நீதிமன்றம் ஒத்திவைத்தது. கோடநாடு வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட சயான், ஜித்தின் ஜாய் ஆகியோர் ஆஜராகினர். குஜராத் ஆய்வகத்தில் இருந்து அறிக்கை கிடைக்க தாமதமாவதால்

அரசு தரப்பில் அவகாசம் கேட்கப்பட்டது. அரசு தரப்பு கோரிக்கையை ஏற்று வழக்கு விசாரணையை ஜூன் 19 தேதிக்கு நீதிமன்றம் தள்ளிவைத்தது

அதிக இடங்களில் வெற்றிபெற்று திமுக ஆட்சி அமைக்கும்

கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் நம்பிக்கை

சென்னை, ஏப்.25-

திமுக கூட்டணி அதிக இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியை அமைக்கும் என, சென்னையில் வாக்கு செலுத்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர். தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு நேற்று நடைபெற்றது. இதையொட்டி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் டி.ராஜா, தி.நகர், தக்கர் பாபா வித்யாலயா பள்ளியிலும், மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் வியாசர்பாடி மூர்த்தி நகரில் உள்ள நடுநிலைப் பள்ளியிலும் தங்களது வாக்குகளைச் செலுத்தினர். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் ஆவடி மாநகராட்சியில் உள்ள கோயில்பதாகை தொடக்கப் பள்ளியில் தனது வாக்கை செலுத்தினார்.

பின்னர், செய்தியாளர்களிடம் அவர்கள் கூறியதாவது:டி.ராஜா: நமது ஜனநாயகத்தை வலுப்படுத்த வாக்கு செலுத்துவது என்பது ஒரு முக்கியமான உரிமையாகும். இந்த தேர்தலில் திமுக தலைமையிலான கூட்டணி வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும். அதேபோல், மேற்கு வங்கத்திலும் பாஜக தோற்கடிக்கப்பட வேண்டும். தமிழகம் பாஜகவின் பேரழிவு தரும் சித்தாந்தத்துக்கு எதிராக போராடுவதைப் போலவே, வங்காள மக்களும் பாஜகவை எதிர்த்துப் போராடி தோற்கடிக்க வேண்டும்.

பெ.சண்முகம்: மக்கள் நீண்ட வரிசைகளில் நின்று, ஆர்வத்துடன் வாக்களித்துள்ளனர். நம்மை யார் ஆள வேண்டும் என்பதை தீர்மானிக்கக் கூடியது இந்த தேர்தல். திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி, அதிகமான இடங்களில் வெற்றிபெற்று ஆட்சியை அமைக்கும். இதற்கான அறிகுறிகள் தமிழகம் முழுவதும் தென்படுகிறது என்று தெரிவித்தார்.

நாங்குநேரி அருகே இரட்டை கொலை நடந்த பெரும்பத்து, வேங்கைவயல் கிராம மக்கள் தேர்தல் புறக்கணிப்பு

திருநெல்வேலி, ஏப்.25-

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி அருகே பெரும்பத்து கிராம மக்கள் வாக்குப்பதிவை புறக்கணித்ததால் வாக்குச் சாவடி வெறிச்சோடியது.

இக்கிராமத்தில் கடந்த சில மாதங்களுக்கு முன் 6 பேர் அரிவாளால் சரமாரியாக வெட்டப்பட்டதில் 2 பேர் உயிரிழந்தனர். மற்ற 4 பேர் பலத்த காயமடைந்தனர். இது தொடர்பாக போலீஸார் வழக்கு பதிந்து 9 பேரை கைது செய்திருந்தனர்.

இந்த விவகாரத்தில் அரசுத்தரப்பும், காவல்துறையும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய இழப்பீடு வழங்கவில்லை என்றும் தெரிவித்து, பெரும்பத்து இந்திரா காலனி கிராம மக்கள் தேர்தலை புறக்கணிப்பதாக ஏற்கெனவே தெரிவித்திருந்தனர்.அவர்களுடன் அதிகாரிகள் பேச்சு நடத்தியும் உடன்பாடு எட்டப்படவில்லை. இங்குள்ள டிடிடிஏ தொடக்கப் பள்ளியில் வாக்குச் சாவடி அமைக்கப்பட்டிருந்தது.பெரும்பத்து கிராமத்தில் 471 ஆண்கள், 498 பெண்கள் என்று மொத்தம் 969 வாக்காளர்கள் உள்ளனர். அவர்களில் 3 பேர் மட்டுமே நேற்று பிற்பகல் வரையில் வாக்களித்திருந்தனர்.இதேபோல் புதுக்கோட்டை மாவட்டம் வேங்கைவயல் கிராம மக்களும் தேர்தலை புறக்கணித்தனர். புதுக்கோட்டை மாவட்டம் வேங்கைவயல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் 2022ம் ஆண்டில் மனிதக் கழிவு கலந்தது தெரிய வந்தது.இந்த செயலை இறையூர் மக்கள் செய்ததாக வேங்கைவயல் மக்களும், வேங்கைவயல் மக்கள் செய்ததாக இறையூர் மக்களும் பரஸ்பரம் குற்றம்சாட்டி வந்தனர். இதன் பேரில் இருதரப்பினருக்கு இடையே அடிக்கடி பிரச்சினை ஏற்பட்டு வந்தது.

இந்நிலையில், இச்சம்பவத்தில் குற்றவாளிகளை கைது செய்ய வேண்டும். வழக்கு பதிந்ததை ரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்தி இரண்டு ஊர் மக்களும் தேர்தல் புறக்கணிப்பு செய்வதாக அறிவித்து இருந்தனர். இருதரப்பிலும் சில அரசியல் கட்சியினர் பேச்சுவார்த்தை நடத்தினர். இதையடுத்து இறையூர் மக்கள் தங்கள் முடிவை மாற்றிக்கொண்டு நேற்று வாக்களித்தனர். வேங்கைவயல் மக்கள் வாக்களிக்காமல் புறக்கணித்தனர்.மேலும், எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில் வேங்கைவயலில் கருப்புக் கொடி கட்டி வைக்கப்பட்டிருந்தது. இதனிடையே கடைசி நேரத்தில் வேங்கைவயலைச் சேர்ந்த 8 பேர் வாக்களித்தனர்.

மேலும் இரு கிராமங்கள்இதுபோல், தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் அருகே குளத்துள்வாய்பட்டி கிராமத்தில் உள்ள இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமை இடமாற்றம் செய்யக்கோரி இக்கிராமத்தினர் தேர்தல் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் தொகுதி பொட்டலூரணி கிராமத்தில் இயங்கும் மீன் கழிவு ஆலையைக் கண்டித்து கிராம மக்கள் தேர்தலை புறக்கணித்தனர்.

பாஜகவில் இணைகிறார் ராகவ் சத்தா மேலும் 6 எம்பிக்கள் இணைய உள்ளதாகவும் பேட்டி

புதுடெல்லி, ஏப்.25-

ஆம் ஆத்மியின் மூன்றில் இரண்டு பங்கு மாநிலங்களவை உறுப்பினர்களுடன் சேர்ந்து தானும் பாஜகவில் இணைய உள்ளதாக ராகவ் சத்தா தெரிவித்துள்ளார்.

ஆம் ஆத்மி கட்சியின் இளம் தலைவர்களில் ஒருவரான ராகவ் சத்தா, 2012ல் அக்கட்சி தொடங்கப்பட்ட காலத்தில் இருந்தே அதில் தன்னை இணைத்துக்கொண்டவர். ஆம் ஆத்மியின் தலைமை ஒருங்கிணைப்பாளரான அரவிந்த் கேஜ்ரிவாலின் நம்பிக்கைக்கு உரியவராக விளங்கிய இவர், கட்சியின் மாநிலங்களவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சமீப காலமாக கேஜ்ரிவாலுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டதை அடுத்து சத்தா, அவரை சந்திப்பதை தவிர்த்து வந்தார். இந்நிலையில், கடந்த சில வாரங்களுக்கு முன்பு ராகவ் சத்தாவிடம் இருந்து கட்சிப் பதவி பறிக்கப்பட்டது.

இந்நிலையில், டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய ராகவ் சத்தா, "ஆம் ஆத்மியின் நிறுவன உறுப்பினர்களில் நானும் ஒருவன். எனது வாழ்வின் 15 ஆண்டுகளை ஆம் ஆத்மி கட்சிக்காக நான் அர்ப்பணித்தேன். நாங்கள் பஞ்சாப், டெல்லி மற்றும் நாட்டின் பிற பகுதிகளில் கட்சியை வளர்த்தெடுத்தோம். ஆனால், இப்போது கட்சி நேர்மையான அரசியலில் இருந்து விலகிவிட்டது. கட்சி தற்போது ஊழல் மலிந்ததாகவும் சமரசங்களுக்கு உட்பட்டதாகவும் மாறி விட்டது.தற்போது இருப்பது பழைய ஆம் ஆத்மி கட்சி அல்ல. ஆம் ஆத்மியின் தவறான நடவடிக்கைகளில் நான் ஈடுபட விரும்பவில்லை. எனவே, கட்சியில் இருந்து விலகி மக்களுடன் நெருக்கமாகச் செல்ல இருக்கிறேன். ஆம் ஆத்மியின் மாநிலங்களவை உறுப்பினர்கள் 10 பேரில் 7 பேர் பாஜகவில் இணைய இருக்கிறோம். இது தொடர்பாக மாநிலங்களவை தலைவருக்கு நாங்கள் கடிதம் எழுதி அனுப்பிவிட்டோம்" என தெரிவித்தார்.அந்த 7 பேர் யார் யார் என்ற கேள்விக்கு, "ஹர்பஜன் சிங், சுவாதி மாலிவால், ராஜேந்திர குப்தா, விக்ரம் சஹ்னி, அசோக் மிட்டல், சந்தீப் பதக் ஆகிய ஆறு பேருடன் நானும் பாஜகவில் இணைய இருக்கிறேன்" என தெரிவித்தார்.

தமிழக உள் மாவட்டங்களில் ஏப்.27 வரை 5 டிகிரி வெப்பம் அதிகரிக்க வாய்ப்பு

சென்னை, ஏப்.25-

தமிழக உள் மாவட்டங்களில் நாளை முதல் 27ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயரக்கூடும்.இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென் தமிழக கடலோர பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. மேலும், கிழக்கு விதர்பா முதல் குமரிக்கடல் வரை தெலங்கானா, உள் கர்நாடகா மற்றும் தமிழகம் வழியாக ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை சுமார் 900 மீட்டர் உயரத்தில், நிலவுகிறது. இதன் காரணமாக நாளை (ஏப்.25) முதல் ஏப்.27ம் தேதி வரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தென் தமிழக கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும், 28ம் தேதி ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழையும் பெய்ய வாய்ப்புள்ளது. 29, 30 தேதிகளில் தமிழகம், புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.உள் தமிழக மாவட்டங்களில் நாளை முதல் 27ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயரக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 100 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 82 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும். தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக ராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சிமடத்தில் 2 செமீ, கன்னியாகுமரி மாவட்டம் திற்பரப்பு பெருஞ்சாணி அணை, புத்தன் அணை, திருநெல்வேலி மாவட்டம் ஊத்து, நாலுமுக்கு ஆகிய இடங்களில் தலா 1 செமீ மழை பதிவாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

பெட்ரோல், டீசல் விலை உயர்த்தும் திட்டம் இல்லை

பெட்ரோலிய அமைச்சகம் அறிவிப்பு

புதுடெல்லி, ஏப்.25-

ஐந்து மாநில சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுக்குப் பிறகு பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தும் எந்தத் திட்டமும் இல்லை என மத்திய பெட்ரோலிய அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா, இஸ்ரேல் படைகள் தாக்குதல் நடத்தியதால் ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் மூடியுள்ளது. இதனால் உலகம் முழுவதும் எரிபொருள் விநியோகம் பாதிக்கப்பட்டு சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை பேரலுக்கு 70 அமெரிக்க டாலரில் இருந்து 119 டாலர் வரை ஏற்ற இறக்கத்துடன் காணப்படுகிறது. இதனால் உலகின் பல நாடுகளில் பெட்ரோல், டீசல் விலை அதிகரித்தது.

ஆனால், இந்தியாவில் மட்டும் பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்படவில்லை. இந்நிலையில் சட்டப் பேரவைத் தேர்தல் முடிந்த பிறகு பெட்ரோல், டீசல் விலை லிட்டருக்கு ரூ.25 முதல் ரூ.28 வரை உயர்த்தப் படலாம் என கோடக் பங்குகள் நிறுவனம் அறிக்கை வெளியிட்டிருந்தது.

இதுகுறித்து பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு அமைச்சகம் எக்ஸ் தளத்தில் வெளியிட்ட தகவலில் கூறியிருப்பதாவது: பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்படும் என சில தகவல்கள் வெளியாகியுள்ளன. இது போன்ற திட்டம் எதுவும் மத்திய அரசிடம் இல்லை. மக்கள் இடையே பீதியை ஏற்படுத்துவதற்காக இதுபோன்ற தவறான தகவல்கள் பரப்பப்படுகின்றன.

கடந்த 4 ஆண்டுகளில் பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்படாத ஒரே நாடு இந்தியா தான். சர்வதேச சந்தையில் ஏற்பட்டுள்ள கச்சா எண்ணெய் விலை உயர்வால், இந்திய மக்களை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசும், பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்களும் எடுத்துள்ளன. இவ்வாறு பெட்ரோலிய அமைச்சகம் தெரிவித்து உள்ளது.

பல வாகனங்கள் மோதி விபத்து உ.பி.யில் 11 பேர் உயிரிழப்பு

மிர்சாபூர், ஏப்.25-

உ.பி.யின் மிர்சாபூர் மாவட்டம், திராமண்ட் கஞ்ச் பள்ளத்தாக்கில் இருந்து லசோடா நோக்கி இறங்கும் தேசிய நெடுஞ்சாலையில் புதன்கிழமை இரவு பல வாகனங்கள் அடுத்தடுத்து மோதி விபத்து நிகழ்ந்தது. இந்த கோர விபத்தில் குழந்தைகள் உட்பட 11 பேர் உயிரிழந்தனர். இது மிகவும் துயரமான மற்றும் நெஞ்சை உலுக்கும் விபத்து என்று உ.பி. முதல்வர் யோகி ஆதித்யநாத் கூறியுள்ளார். இந்த விபத்து குறித்து பிரதமர் மோடி 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "மிர்சாபூர் விபத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகளால் நான் மிகுந்த வேதனை அடைந்துள்ளேன். துயருற்ற குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கல்கள்" என்று கூறியுள்ளார். மேலும் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.2 லட்சம், காயம் அடைந்தவர்களுக்கு தலா ரூ.50 ஆயிரம் நிவாரண நிதி வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.

விருதுநகர் பட்டாசு ஆலை விபத்து

தேசிய மனித உரிமைகள் ஆணையம் தாமாக முன்வந்து விசாரணை

புதுடெல்லி, ஏப்.25-

விருதுநகர் மாவட்டம் கட்டனார்பட்டியில் தனியார் பட்டாசு தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் 18 தொழிலாளர்கள் உயிரிழந்த விவகாரத்தை, தேசிய மனித உரிமைகள் ஆணையம் தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டுள்ளது.

இது தொடர்பாக தேசிய மனித உரிமைகள் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கை: தமிழ்நாட்டின் விருதுநகர் மாவட்டம், கட்டனார்பட்டியில் உள்ள தனியார் பட்டாசு தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 18 தொழிலாளர்கள் உயிரிழந்ததாகவும், ஆறு பேர் காயமடைந்ததாகவும் வெளியான செய்தியை தேசிய மனித உரிமைகள் ஆணையம் தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டுள்ளது.

2026ஏப்ரல் 19 அன்று இந்தச் சம்பவம் நடந்தபோது, பெண்கள் உட்பட 100க்கும் அதிகமான தொழிலாளர்கள் அந்தத் தொழிற்சாலை வளாகத்தில் இருந்துள்ளனர். ரசாயனங்களைக் கலக்கும்போது, உற்பத்தி செய்யும் நடைமுறையின்போது ஏற்பட்ட உராய்வின் காரணமாக இந்த வெடிவிபத்து நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது. அண்மையில் இதே மாவட்டத்தில் நடந்த மற்றொரு சம்பவத்தில் நான்குபேர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக இரண்டு வாரங்களுக்குள் விரிவான அறிக்கை சமர்ப்பிக்குமாறு, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் மற்றும் விருதுநகர் மாவட்டக் காவல் கண்காணிப்பாளருக்கு ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.விபத்தில் காயமடைந்தவர்களின் உடல்நிலை, வழக்கின் விசாரணை, உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களின் உறவினர்களுக்கு ஏதேனும் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதா என்பது போன்ற விவரங்கள் அந்த அறிக்கையில் இடம்பெற வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிஹார் சட்டப்பேரவை: நம்பிக்கை வாக்கெடுப்பில் என்டிஏ அரசு வெற்றி

பாட்னா, ஏப்.25-

பிஹார் முதல்வர் சாம்ராட் சவுத்ரி இன்று நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் எளிதாக வெற்றி பெற்றார்.பிஹார் முதல்வராக இருந்த நிதிஷ் குமார் பதவி விலகியதை அடுத்து கடந்த 15ம் தேதி மாநிலத்தின் புதிய முதல்வராக பொறுப்பேற்றார் சாம்ராட் சவுத்ரி. இதையடுத்து, 243 சட்டப்பேரவை உறுப்பினர்களைக் கொண்ட சட்டப்பேரவையில், இன்று (ஏப். 24) நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில், சாம்ராட் சவுத்ரி தலைமையிலான அரசு எளிதாக வெற்றி பெற்றது. இதன்மூலம், பிஹாரில் என்டிஏ கூட்டணியின் ஒற்றுமை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.முன்னதாக நம்பிக்கை கோரும் தீர்மானத்தின் மீது நடந்த விவாதத்தில் பேசிய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் தேஜஸ்வி யாதவ், "வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள நிலையான அரசு அவசியம். ஆனால், பிஹார் ஒரு தனித்துவமான மாநிலம். கடந்த ஐந்து ஆண்டுகளில் இது ஐந்தாவது முறையாக அமைந்திருக்கும் அரசாகும். இதற்கு முன் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு முதல்வர் இருந்தார். தற்போது நியமிக்கப்பட்ட ஒருவர் முதல்வராகி இருக்கிறார். என்றாலும், அவருக்கு நாங்கள் நன்றி தெரிவிக்கிறோம். லாலு பிரசாத் யாதவின் பள்ளியில் பயின்று பட்டம் பெற்ற ஒருவர், இப்பதவியை ஏற்றுக்கொண்டிருப்பதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். அவர் (சாம்ராட் சவுத்ரி) முதல்வராக பொறுப்பேற்பதைவிட எங்களுக்கு சிறந்த விஷயம் வேறு என்ன இருக்க முடியும்?" என தெரிவித்தார்.தேஜஸ்வி யாதவின் உரையைத் தொடர்ந்து பேசிய முதல்வர் சாம்ராட் சவுத்ரி, "அதிகாரம் என்பது யாருக்கும் பரம்பரைச் சொத்து அல்ல. முதல்வர் பதவி என்பது 14 கோடி பிஹாரிகளின் ஆசியால் கிடைத்துள்ளது.நிதிஷ் குமார், பிரதமர் மோடி, நிதின் நபின், சிராக் பாஸ்வான், உபேந்திர குஷ்வாஹா, ஜிதன் ராம் மாஞ்சி ஆகியோரின் ஆசி எனக்கு கிடைத்துள்ளது. நிதிஷ் குமார் இல்லாவிட்டால், லாலு பிரசாத் யாதவ் முதல்வராக ஆகி இருக்க முடியுமா? லாலு பிரசாத் யாதவை முதல்வராக்கியதும் நிதிஷ் குமார்தான். லாலு பிரசாத் யாதவ் எனது அரசியல் வாழ்க்கையில் பல்வேறு கொடுமைகளை இழைத்தார். அவ்வாறு அவர் இழைக்காமல் இருந்திருந்தால் நான் இன்று பிஹார் முதல்வராக ஆகியிருக்க மாட்டேன்" என தெரிவித்தார்.வலுவான அரசியல் பின்னணி கொண்ட குடும்பத்தில் 1968ல் பிறந்த சாம்ராட் சவுத்ரி, 1990 முதல் 1999 வரை சமதா கட்சியிலும், பின்னர் 2014 வரை ராஷ்ட்ரிய ஜனதா தளம் கட்சியிலும், பின்னர் 2017 வரை ஐக்கிய ஜனதா தளம் கட்சியிலும் இணைந்து பணியாற்றியவர். 2017 முதல் இவர் பாஜகவில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

■ மதுரை மாவட்டம் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 பொது மக்களுக்கு இடையே வாக்களிப்பது குறித்து விழிப்புணர்வு வீடியோ படக்காட்சி வாடிப்பட்டி பேருந்து நிலையத்தில் அதிநவீன மின்னணு வாகனம் மூலம் தேர்தல் தொடர்பான வீடியோ படக் காட்சி பொதுமக்கள் பார்வைக்கு பட காட்சி நடத்தப்பட்டது

■ தென்காசி மாவட்டம் தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீகுமார், சங்கரன்கோவில் ஸ்ரீ கோமதி அம்பாள் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் உள்ள வாக்குசாவடியில் தனது வாக்கினைபதிவு செய்தார்.

ஆதரவற்ற முதியவரின் உடலை நல்லடக்கம் செய்து மனிதநேயம் காத்த மக்கள் பொது மனித சமூக சேவை அறக்கட்டளை

பல்லடம் ஏப்.25- திருப்பூர் மாவட்டம் பல்லடம் பகுதியைச் சேர்ந்த ஆதரவற்ற முதியவர் ஒருவருக்கு, தன்னார்வ அறக்கட்டளை சார்பில் இறுதிச் சடங்குகள் செய்யப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்ட நிகழ்வு அப்பகுதியில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.சம்பவம் குறித்த விவரம்:பல்லடம் பகுதியைச் சேர்ந்த வெங்கடசாமி (66) என்ற முதியவர், இயற்கை எய்தினார். ஆதரவற்ற நிலையில் இருந்த இவரது மறைவு குறித்து தகவல் அறிந்த 'மக்கள் பொது மனித சமூக சேவை மற்றும் அறக்கட்டளை' நிர்வாகிகள், உடனடியாகச் செயல்பட்டு அவரது உடலை மீட்டனர். மனிதநேய அடிப்படையில், அந்த முதியவரின் உடலுக்கு அறக்கட்டளையின் சார்பாக இறுதி மரியாதை செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, கொடுவாய் மின் மயானத்தில் முறைப்படி இறுதிச் சடங்குகள் செய்யப்பட்டு உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.இது குறித்து அறக்கட்டளை நிர்வாகிகள் கூறுகையில், "சமூகத்தில் ஆதரவற்ற நிலையில் உயிரிழப்பவர்களுக்கு கௌரவமான இறுதிச் சடங்குகளைச் செய்வதை எமது அமைப்பு ஒரு கடமையாகக் கருதுகிறது. வெங்கடசாமி ஐயாவின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்," என ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்தனர். இந்த இக்கட்டான சூழலில் மனிதநேயத்துடன் செயல்பட்ட அறக்கட்டளை நிர்வாகிகளுக்கு பொதுமக்கள் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

விஜய் வாக்குகளை பிரிப்பார்; பழனிசாமி முதல்வராவார்: நயினார் நாகேந்திரன் கருத்து

திருநெல்வேலி, ஏப்.25- தவெக தலைவர் விஜய் வாக்குகளை பிரிப்பார், ஆனால் பழனிசாமி தலைமையில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமையும் என்று, பாஜக மாநில தலைவரும் சாத்தூர் தொகுதி வேட்பாளருமான நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.பாளையங்கோட்டை மகாராஜநகர் ஜெயேந்திரா பள்ளி வாக்குச் சாவடியில் தனது வாக்கை பதிவு செய்த அவர் செய்தியாளர்களிடம் கூறியது: திருநெல்வேலி, சாத்தூர் ஆகிய இரு தொகுதிகளும் எனது இரண்டு கண்கள்.ஒரு நல்ல அரசாங்கத்தை தேர்ந்தெடுப்பதற்கு மக்களுக்கு இந்த வாய்ப்பு, 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை கிடைத்துள்ளது. அந்த வாய்ப்பாக இந்த நாள் அமைந்துள்ளது.

நாட்டின் நலன் கருதி, எதிர்கால சந்ததியின் நலன் கருதி தமிழகத்தில் போதை பொருட்கள் இல்லாமல் இருக்க வேண்டி, எதிர்கால சந்ததிகள் நல்ல முறையில் வாழ வழிகாட்டும் வகையில், விலைமதிப்பு இல்லாத வாக்குரிமையை பயன்படுத்த வேண்டும்.7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவில் வாக்குச்சாவடிகளில் 500க்கும் மேற்பட்டோர் நீண்ட வரிசையில் காத்திருந்த வாக்களிக்கிறார்கள். 5 ஆண்டுகளாக முதல்வராக இருந்த ஸ்டாலின் நல்லாட்சியை தரவில்லை என்பது கண்கூடாக தெரிகிறது.

சாத்தூர் மட்டுமல்ல தமிழகம் முழுவதுமே தேசிய ஜனநாயக கூட்டணிக்கு பிரகாசமான வெற்றி வாய்ப்புள்ளது. எல்லா மக்களும் ஆரவாரத்துடன் மகிழ்ச்சியாக வாக்களித்து வருகிறார்கள். மிகப்பெரிய எழுச்சி கிடைத்துள்ளது.விஜய்யால் தாக்கத்தை ஏற்படுத்த முடியாது. அனைத்து தொகுதிகளிலும் வாக்குகளை அவர் பிரிப்பார். அதனால் என்டிஏ மீண்டும் ஆட்சி அமைக்கும். பழனிச்சாமி முதல்வர் ஆவார். இவ்வாறு அவர் தெரிவித்தார்

■ தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதியில் தேசிய ஜனநாயக கூட்டணியின் சார்பில் போட்டியிடும் பா.ஜ.க வேட்பாளர் ஆனந்தன் அய்யாசாமி தமது சொந்த ஊரான விஸ்வநாதபேரியில் அமைந்துள்ள அருணோதயா நடுநிலைப் பள்ளியில் தனது வாக்கினை பதிவு செய்தார்.

■ தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதி ஆ இ அதிமுக வேட்பாளர் டாக்டர் திலீபன் ஜெய்சங்கர் ராஜபாளையம் மெயின் ரோடு கலப்பாகுளம் அன்னை வேளாங்கண்ணி மேல்நிலைப் பள்ளியில் உள்ள வாக்குசாவடியில் தனது வாக்கினைபதிவு செய்தார்.

100% வாக்குப்பதிவு என்று கூறிவிட்டு அரசு பேருந்துகளை முறையாக இயக்கவில்லை

சீமான் குற்றச்சாட்டு

காரைக்குடி, ஏப்.25- தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவு என்று சொல்லிவிட்டு அரசு பேருந்துகளை ஏற்பாடு செய்யாதது தவறு என நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறினார். காரைக்குடி தொகுதி நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீமான், நேற்று கம்பன் பள்ளியில் நடைபெற்ற வாக்குப்பதிவை பார்வையிட்டார். அப்போது, தவெக வேட்பாளர் பிரபு அங்கு வந்தார்.அவர், சீமானை பார்த்ததும் கட்டியணைத்து வாழ்த்து விசாரித்தார். அதைத்தொடர்ந்து ஆலங்குடியார் அரசு பள்ளியில் நடைபெற்ற வாக்குப்பதிவை சீமான் பார்வையிட்டார்.பின்னர் செய்தியாளர்களிடம் சீமான் கூறியதாவது: பொங்கல், தீபாவளி போன்ற பண்டிகைகளுக்கு கூடுதலாக பேருந்துகளை இயக்குகின்றனர். அதேபோல் ஜனநாயக திருவிழாவுக்கு வந்து செல்ல கூடுதல் பேருந்துகளை ஏற்பாடு செய்து கொடுத்திருக்க வேண்டும்.100 சதவீத வாக்குப்பதிவு என்று சொல்லிவிட்டு போதிய பேருந்துகளை இயக்க ஏற்பாடு செய்யாதது தவறு. தேர்தல் நடத்துவதே ஆட்சி மாற்றத் துக்குத்தான். அதே ஆட்சி தொடரட்டும் என்றால் தேர்தல் எதற்கு, வாக்கு சதவீதம் அதிகரிப்பு வரவேற்கத்தக்கது.

வாக்களிக்காமல் நிராகரிப்பதும் தேசதுரோக குற்றம்தான். அரசின் திட்டங்கள் அனைத்தும் தேவை என நினைக்கும்போது வாக்களிப்பதையும் தவறாமல் செய்ய வேண்டும். மக்களுக்கு வாக்கு செலுத்த வேண்டும் என்ற பொறுப்புணர்வு வரவேற்கத்தக்கது.அஜித், சிவகார்த்திகேயன் வந்திருந்தால் இதைவிட கூட்டம் அதிகம் வரும். திரையில் பார்த்த ஒரு நடிகரை நேரில் பார்க்கும்போது ஈர்ப்பு இருக்கத்தான் செய்யும். இவ்வாறு கூறினார்.

உ.பி. தேர்தலில் மீண்டும் ஆதித்ய நாத்தே முதல்வர் வேட்பாளர்: பாஜக தலைவர் நிதின் நவீன் அறிவிப்பு

புதுடெல்லி, ஏப்.25- அடுத்த ஆண்டு உத்தர பிரதேசத்தில் தேர்தல் நடைபெற உள்ளது. இதற்காக உ.பி.யின் மேற்குப் பகுதியில் உள்ள தாத்ரியில் எதிர்க்கட்சியான சமாஜ்வாதி, தனது 'மிஷன் 2027' தேர்தல் பிரச்சாரத்தைத் தொடங்கி விட்டது.

பாஜகவும் முதல்வர் வேட்பாளரைத் தேர்வு செய்துவிட்டது. இதனால் உ.பி. தேர்தல் களம் சூடுபிடித்துவிட்டது. இது குறித்து பாஜக தலைவர் நிதின் நவீன் இந்தி தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது: உ.பி. முதல்வராக யோகி ஆதித்யநாத் பதவி வகிக்கிறார். அவரது தலைமையின் கீழ்தான் மாநில அரசு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.2027 சட்டப்பேரவைத் தேர்தலில் யோகி ஆதித்ய நாத்தே பாஜக முதல்வர் வேட்பாளராக முன்னிறுத்தப்படுவார். மாநிலத்தில் தொடர்ந்து 3வது முறையாக ஆட்சியைப் பிடிப்போம். ஒரு காலத்தில் மிரட்டிப் பணம் பறித்தல், குற்றச் செயல்களுக்குப் பெயர் பெற்றிருந்தது உ.பி. இப்போது சிறந்த சட்டம், ஒழுங்கு மற்றும் அதிவேக நெடுஞ்சாலைகளுக்குப் பெயர் பெற்ற மாநிலமாகத் திகழ்கிறது. இவ்வாறு நிதின் நவீன் கூறியுள்ளார்.

உ.பி.யில் கடந்த 2017ல் பாஜக முதல் முறையாக தனி மெஜாரிட்டியுடன் ஆட்சி அமைத்தது. துணை முதல்வராக கேசவ் பிரசாத் மவுரியா பதவியேற்றார். முதல்வராகும் கனவில் இருந்து வருகிறார். இந்நிலையில், மீண்டும் யோகி ஆதித்யநாத் முதல்வர் வேட்பாளர் என்று பாஜக அறிவித்துள்ளதால் கேசவ் பிரசாத் ஏமாற்றம் அடைந்துள்ளார்.முன்னதாக உ.பி. முதல்வர் ஆதித்யநாத் மத்திய அமைச்சராவார். பிரதமர் மோடிக்குப் பிறகு அப்பதவிக்கு ஆதித்யநாத் தேர்வு செய்யப்படுவார் என தகவல்கள் வெளியாயின. அப்போதுதான் ஆர்எஸ்எஸ் தலைவர் மோகன் பாகவத் ஆதித்யநாத் சந்திப்பு நடந்தது. இந்தச் சூழலில் நிதின் நவீன் வெளியிட்டுள்ள அறிவிப்பு மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

தமிழகத்தில் மாற்றம் வரும்: அண்ணாமலை நம்பிக்கை

கோவை, ஏப்.25- தமிழகத்தில் நல்ல ஒரு மாற்றம் வரும் என்று முழுமையாக நம்புகிறேன் என பாஜக மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.கோவை பீளமேட்டில் உள்ள தனியார் கல்லூரி வாக்குச் சாவடியில் வாக்களித்தபின் அண்ணாமலை செய்தியாளரிடம் கூறியதாவது: தமிழகத்தில் நல்ல ஒரு மாற்றம் வரும் என்று முழுமையாக நம்புகின்றேன்.

அதே சமயம், கடந்த இரண்டு மூன்று நாட்களாக வாக்குக்கு பணம் கொடுத்தல் போன்றவை வாக்குப் பதிவுக்கு இடையூறு ஏற்படுத்தியுள்ளது. சென்னையில் இருந்து தென் தமிழகத்துக்கு செல்லக் கூடிய பேருந்து வசதிகள் குறைவாக இருக்கின்றன.

இவ்விவகாரத்தில் தேர்தல் ஆணையம் இன்னும் சிறப்பாக செய்திருக்கலாம். பணம், பரிசுப் பொருட்கள் அனைத்தும் ஒரே நாளில் வரவில்லை. முன்னரே கொண்டு வந்து எங்கோ ஒரு இடத்தில் பதுக்கி விநியோகிக்கின்றனர்.எஸ்ஐஆர் பணிகள் அனைத்தும் நேர்மையான முறையில் நடந்தது. வாக்குக்கு பணம், பொருட்கள் தைரியமாக கொடுக்கின்றனர். தேர்தலுக்கு மூன்று மாதத்துக்கு முன்பே தேர்தல் ஆணையம் கட்டுப்பாட்டில் எடுக்க வேண்டிய நிலை உள்ளது.தேர்தல் அன்றுகூட பல இடங்களில் திமுக தனது சாஃப்ட் பிரச்சாரத்தை செய்கிறது. தேர்தல் ஆணையம் இதை கண்காணித்து தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

சேகர்பாபு தவெக வேட்பாளர் சினோரா அசோக் மோதல்

சென்னை, ஏப்.25- துறைமுகம் தொகுதியில் போட்டியிடும் தவெக வேட்பாளர் சினோரா அசோக் நேற்று மாலை மண்ணடியில் நண்பர்களுடன் நின்று பேசிக் கொண்டிருந்தார்.

அப்போது, அங்கு தனது ஆதரவாளர்களுடன் காரில் வந்த அமைச்சர் சேகர்பாபு, சினோரா அசோக்குடன் நின்றிருந்த வழக்கறிஞரை தாக்க முயன்றதாக கூறப்படுகிறது. இதனால், இரு தரப்பினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பாக மாறியது. இதில் ஆத்திரம் அடைந்த சேகர்பாபு, சினோரா அசோக்கை தாக்கியதாக கூறப்படுகிறது. இதையடுத்து, போராட்டத்தில் ஈடுபட்டவர்களை போலீஸார் கைது செய்து அப்புறப்படுத்தினர்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000